| MSSRF Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **24/01/2024** | முதல் | **28/01/2024** |
| | அறிக்கை எண் : | **007/ 2024** | வெளியீட்டு நாள் : | | **23/01/2024** | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19° - 21° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (18.01.2024 முதல் 22.01.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 28-01-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18/01 | 19/01 | 20/01 | 21/01 | 22/01 | தேதி | நாள்-1 24/01 | நாள்-2 25/01 | நாள்-3 26/01 | நாள்-4 27/01 | நாள்-5 28/01 |
| 0.0 | 0 | 0.1 | 0 | 0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 32 | 32 | 32 | 33 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 32 | 32 | 32 | 32 | 32 |
| 21 | 18 | 18 | 20 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 24 | 24 | 24 |
| 5 | 2 | 3 | 4 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 4 | 1 | 1 | 7 |
| 87 | 83 | 67 | 77 | 83 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 55 | 43 | 46 | 43 | 53 | | 50 | 50 | 40 | 40 | 40 |
| 8 | 8 | 11 | 7 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 12 | 12 | 14 |
| கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவும். அதிகாலை நேரங்களில் மூடுபனி காணப்பட வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23°-24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவானது முதல் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 14 கி.மீ வேகத்தில் வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அடுத்த 5 நாட்களுக்கு மாவட்டத்தில் வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு, எனவே விவசாயிகள் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். உங்கள் நிலத்தில் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் காய்கறி பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும். அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவ வாய்ப்புள்ளதால், உங்கள் கால்நடைகளை சூரிய உதயத்திற்கு 2 மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும்.

## அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (24 ஜன - 01 பிப்ரவரி 2024):

**மழைப்பொழிவு :**

24-01-2024 - 01-02-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளது

**அதிகபட்ச வெப்பநிலை :**

24-01-2024 - 01-02-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

24-01-2024 - 01-02-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நெல் , மக்காசோளம், கால்நடை.**

**மக்காசோளம்:**

மக்காச்சோளம் பயிரில் குருத்து ஈ தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன் புழுக்கள் இலையுறைக்கும், தண்டிற்கும் இடையே குடைந்து சென்று நடுக் குருத்தை தாக்குகிறது. இதனால் நடுக் குருத்து அழுகி விடும்.

ஒரு எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் மீன் இறைச்சிப் பொறியினை அமைத்து குருத்து ஈக்களை கவர்ந்து அழிக்கலாம்.

இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 100மில்லி என்ற அளவில் குளோரோட்ரானிப்ரோல் மருந்தினை தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**நெல் :**

நெற்பயிரில் பச்சை தத்துப்பூச்சியின் தாக்குதல் தென்படுகின்றது. இவற்றின் தாக்குதலால் இலைகள் நுனி முதல் அடிப்பகுதி வரை முழுவதும் மஞ்சள் நிறமாக மாறி விடும். பயிரை முழுவதுமாக தாக்கி அதன் சாற்றை உறிஞ்சுவதால் பயிரின் வீரியம் குறைந்து வளர்ச்சி குன்றி குட்டையாகக் காணப்படும். மேலும் தாக்குதல் தீவிரமாகும் போது பயிர் வாடி முற்றிலுமாக காய்ந்து போகும் நிலை ஏற்படும்.

இதனை கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 60மில்லி புங்கம் எண்ணெய், 60மில்லி இலுப்பை எண்ணெய், 60மில்லி வேப்பண்ணெய் உடன் 10மில்லி ஒட்டும் பசை ( 10 கிராம் காதிசோப் ) சேர்த்து நன்கு கலந்து 12 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும்.

விளக்குப் பொறிகளை பயன்படுத்தியும் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

**கால்நடை:**

நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் தங்களது கால்நடைகளுக்கு கானை நோய் வர வாய்ப்பு உள்ளது.

இந்நோயிலிருந்து தங்கள் மாடுகளை காப்பற்ற விவசாயிகள் ஜனவரி மாதத்தில் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களின் மாடுகளுக்கு கால்கானை வாய்க்கானை (கோமாரி) நோய்க்கான தடுப்பூசி மருந்தினைப் போட்டுக் கொள்ளவும்.